செ.வெ.எண்:10 நாள்:08.03.2018

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
## மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, கரூர்
## பத்திரிக்கைச்செய்தி
## சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்தேர்வுசெய்தல்

கரூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களில்உள்ள கிராமதொகுப்புகளுக்குகீழ்காணும் தகுதிகளின்படிசமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்தேர்வுசெய்யப்படவுள்ளனர். இவர்களுக்குமதிப்பூதியமாகமாதம் ரூ.2000/– வீதம் சம்மபந்தப்பட்டஊராட்சிஅளவிலானகூட்டமைப்பு மூலம் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கதேவையானதகுதிகள் :**

- ஊராட்சிஅளவிலானகூட்டமைப்பைச் சார்ந்த குழு உறுப்பினராகஇருத்தல்வேண்டும்.
- தேர்வுசெய்யப்படவேண்டியஉறுப்பினர் அதேதொகுப்பைச் சார்ந்தவராகஇருத்தல்அவசியம்.
- மக்கள்நிலைஆய்வால்கண்டறியப்பட்டஉறுப்பினராக (PIP No.) இருத்தல்வேண்டும்.
- விண்ணப்பிக்கும் நாளில் 35 வயதுக்குகீழ்இருத்தல்வேண்டும்.
- 12–வது வகுப்புதேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். நன்றாகஎழுதப் படிக்கமற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவும் இருத்தல்வேண்டும்.
- நல்லதகவல்தொடர்புதிறன் உடையவர்களாகஇருத்தல்வேண்டும்.
- கிராமத்திலிருந்துஅருகாமையிலுள்ள வங்கிகளுக்குச் செல்லவிருப்பம் உள்ளவர்களாகஇருத்தல்அவசியம்.
- கணினிதிறன் உடையவர்களுக்குமுன்னுரிமைவழங்கப்படும்.
- கைபேசிவைத்திருப்பவர்களாகவும், அதைஇயக்கி குறுந்தகவல்அனுப்பவும் பெறவும் திறனுடையவர்களாகவும் இருத்தல்அவசியம்.

மேற்காணும் தகுதியுள்ளசுயஉதவிக்குழுஉறுப்பினர்கள்தங்களதுவிண்ணப்பங்களைதாங்கள்சார்ந்துள்ள ஊராட்சிஅளவிலானகூட்டமைப்பு மூலமாக 15.03.2018–க்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, அறை எண்.212–ல் சமர்ப்பிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளியீடு:
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**